இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
மட்டம் 03 – 2008/2009
**LWU 1412** -சட்ட முறைமை
தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை - 1
காலம்: 40 நிமிடங்கள்

திகதி: 30.09.2008 நேரம்: மு.ப 11.00 – மு.ப 11.40

**ஒரு வினாவிற்கு மாத்திரம் விடை தருக.**
**தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

1. "சட்டப் பொருட்களை அணுகுதல் சட்ட செயன்முறையின் இலகுவான தொழிட்பாட்டுக்கு மிகவும் முக்கியத்துவமானது என்ற காரணத்தால், இலங்கையில் அத்தகைய பொருட்களுக்கான அணுகுதலின் போதாத தன்மையானது இச் செயன்முறையை எதிர்மறையாக பாதித்துள்ளது."

   உமது விடையினை பொருத்தமான உதாரணங்களுடன் ஆதாரபபடுத்தி மேற்கண்ட கூற்றின் வலிதாந்தன்மையை நுணுக்கமாக பகுப்பாய்க.

2. ஹொலொ வூட் எனும் பகுதியானது அதன் திரைப்படங்களுக்கு சர்வதேச ரீதியில் மிகப் பிரசித்தி பெற்ற இடம் என்பதுடன் அதிலும் விசேடமாக சண்டைப்படங்களுக்கு அவ்விடம் பிரசித்திபெற்றதாகும். தனித்தன்மையான கட்டிடநிர்மாண தோற்றப்பாடுகள் உடைய அந்நிலத்தின் பெரும்பாலான கட்டிடங்கள் சண்டைகள் மற்றும் துப்பாக்கி மோதல்களை ஒளிப்பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டன என்பதுடன் அப் படப்பிடிப்புக்கள் பல கட்டிடங்கள் சேதத்திற்குள்ளாகுவதற்கு வழிவகுத்தன.

   ஹோலொ வூட் இன் பாராளுமன்ற கட்டிடமானது விசேட வரலாற்று மற்றும் கட்டிடவடிவமைப்பு பெறுமதியுடைய தேசிய மரபுரிமையாகவுள்ள இடமாகும் என்பதுடன் வருடம் முழுவதும் பார்வையாளர்கள் விஜயம் செய்கின்ற இடமுமாகும். அதன் காரணமாக அதனை பாதுகாப்பதற்கும் அதனைப் போன்ற மற்ற கட்டிடங்கள் திரைப்பட படிப்பிடிப்பாளர்களால் சேதத்திற்குள்ளாக்கப்படாமல் பாதுகாப்பதற்கும் ஹொலொ வூட் பாராளுமன்றம் வரலாற்று இடங்களை பாதுகாப்பதற்கான சட்டத்தினை இயற்றியது. இச்சட்டத்தின் பிரிவு 10இல் "பார்வையிடும் நோக்கம் தவிர்ந்த பாராளுமன்றம் உள்ளடங்கலாக வரலாற்று கட்டிடங்கள் என பட்டியல் இடப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு எந்த திரைப்பட நட்சத்திரங்களோ அல்லது ஒளிப்பதிவாளர்களோ உட்புகக் கூடாது" எனக் கூறப்பட்டிருந்தது.

   சண்டைப் படங்களில் நடிக்கின்றவரும் அவரது படத்தின் காட்சிகளின் போது அடிக்கடி கட்டிடங்களுக்கு சேதத்தினை விளைவிக்கும் விசேடமா அவதானிப்புக்கு உட்பட்டவருமான மான ஹொட் சொட்(Hot shot) என்பவர் மிக அண்மையில்

ஹொலொ வூட் பாராளுமன்றத்திற்கு தேர்வு செய்யப்பட்டார். தமது அண்மைய திரைப்படத்தில், நாயகனாக தாம் தோன்றிய அதே தோற்றத்தில் தம்மை அணிவித்துக்கொண்டு குறித்த நிகழ்வினை ஒளிப்பதிவு செய்வதற்கு பல புகைப்படக்காரர்கள் தம்மை தொடரும் வகையில் பாராளுமன்ற அங்குரார்ப்பன வைபவத்திற்கு சமூகந்தந்தார்.

பாராளுமன்றத்தில் உள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஹொட் சொட் இனையும், புகைப்படக்காரர்களையும் பாராளுமன்றத்திற்கு உள்வருவதனை தடுக்க வேண்டுமா? என்பதைப்பற்றி நிச்சயமற்றவர்களாக உள்ளனர் என்பதுடன் இவ்விடயம் தொடர்பில் உமது ஆலோசனையை நாடுகின்றனர். ஹொலொ வூட்டிற்கு பிரயோகமுடைய பொருள்கோடல் விதிகளாவன இலங்கையின் விதிகளுக்கு ஒப்பானவை எனக் கருதிக்கொண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்குக. பொருத்தமான தீர்ப்புச்சட்டங்களுடன் உமது விடையினை விஸ்தரிக்க.

(பதிப்புரிமையுடையது)